DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, YERCAUD
DATE : 22.01.2026

| | | |
|---|---|---|
| Case No. | : | CC. No.22/2025 |
| Deposition of Witness for Prosecution | : | PW.2 |
| Name | : | பூங்கொடி |
| Husband Name | : | சுந்தரம் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | xxxx |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Deposition of witness for prosecution side solemnly affirmed by Tr. E. Govindharasu, Grade III Bench Clerk, of this court, on 22.01.2026 in accordance with the provisions of Act 1 of 1873.

**(எதிரி ஆஜர்)**

**விசாரணை தொடங்கப்பட்ட நேரம்(01.06.P.M):-**

**முதல் விசாரணை:-**

நான் தற்போது சேலம் மாவட்டம், ஏற்காடு வட்டம், கேழையூரில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகின்றேன். ஆஜர் எதிரியை தெரியும். சுமார் 1 வருடத்திற்கு முன்பு ஒரு நாள் எனது அப்பா கரியராமன் ஆஜர் எதிரியின் வீட்டிற்கு சென்றிருந்தார். நான் ஆஜர் எதிரியின் வீட்டிற்கு முன்பாக உள்ள காட்டில் வேலை செய்துகொண்டிருந்தேன். ஆஜர் எதிரியின் வீட்டிலிருந்து சத்தம் கேட்கவே உடனே நான் ஓடிச்சென்று பார்த்ததில் எனது அப்பாவை கத்தியால் மூன்று முறை வெட்டி விட்டார்.

ஆஜர் எதிரி கட்டையால் அடித்ததில் இடுப்பு எலும்புகள் மற்றும் நெஞ்சு பகுதியிலும், சிறுநீர் குழயில் பாதிப்பு அடைந்தது. என்னிடம் காட்டப்படும் மரக்கட்டையை கொண்டு எனது அப்பாவை அடித்ததில் இடுப்பு மற்றும் நெஞ்சு பகுதியிலும் காயம் ஏற்பட்டது. நான் சேலத்திலுள்ள தனியார் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றேன். எனது அப்பா 15 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றார். ஆஜர் எதிரியும் எனது அப்பாவும் மது குடித்துக்கொண்டிருந்தார்கள், ஆஜர் எதிரி எனது அப்பாவின் பாக்கெட்டில் கைவிட்டு பணம் எடுக்கும்போது எனது அப்பா உதறிவிட்டார். ஆஜர் எதிரி எனது

அப்பாவை தலையில் அடித்ததால் சுயநினைவில்லாமல் எந்த வேலைக்கும் செல்லாமல் இருக்கிறார்.

எனது அப்பாவிற்கு சிறுநீர் செல்லும் இடம் பாதிக்கப்பட்டதால் 10 நாட்களுக்கு ஒரு முறை சேலத்திலுள்ள சரவணா மருத்துவமனைக்கு அழைத்துச்செல்கிறேன். போலீசார் என்னை விசாரணை செய்தனர். சம்பவத்தை நான் நேரடியாக பார்த்தேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>

1. அ.சா.1–ம், ஆஜர் எதிரியும் மது அருந்தியதை நேரடியாக பார்த்தேன். அ.சா.1 மற்றும் ஆஜர் எதிரியும் மது அருந்தியதை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரியல்ல. எனது வீட்டிற்கும் ஆஜர் எதிரியின் வீட்டிற்கும் இடையே 1 கி.மீ தூரம் இருக்கும் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரி எனது தந்தை அ.சா.1–ன் பாக்கெட்டில் கைவிட்டு பணம் எடுக்கும்போது பிரச்சனை ஏற்பட்டது. சம்பவம் நடந்த தேதி, மாதம், தெரியுமா என்றால் மாதம் தெரியாது ஆனால் 1 வருடம் ஆகியிருக்கும்.

2. எனக்கு படிக்க தெரியாது அதனால் மாதம் சரியாக நினைவில் இல்லை. தமிழ் மாதங்கள் தெரியுமா என்றால் தெரியும். ஆஜர் எதிரி எனது தந்தையை கத்தியால் குத்தினார் என்றால் சரிதான். கத்தியால் 3 வெட்டுகளும், மற்ற காயங்கள் கட்டையாலும் ஏற்பட்டது. கத்தி காதில் உரசி அறுபட்டு தையல் போடப்பட்டுள்ளது. ஆஜர் எதிரி எனது தந்தையை தாக்கியதை சுமார் 500 தூரத்திலிருந்து பார்த்திருப்பேனா என்றால் சரியல்ல, பக்கத்திலிருந்து தான் பார்த்தேன்.

3. சம்பவம் நடந்த தினத்தன்று எனது தந்தை என்ன நிறம் சட்டை அணிந்திருந்தார் என்று சொல்ல முடியாது என்றால் தெரியாது. ஆஜர் எதிரி என்ன நிறம் சட்டை, வேட்டி அணிந்திருந்தார் என்று தெரியாது என்றால் சரிதான். பட்டியல் சாட்சி 4 சாமிநாதன் எனது தம்பி ஆவார். பட்டியல் சாட்சி 3 கோவிந்தன் எனது கணவரின் அண்ணன் ஆவார். பட்டியல் சாட்சி வெங்கடேஷ் த/பெ. வெங்கடராமன் எனது மாமா முறை என்றால் சரிதான்.

4. நான் சம்பவத்தினை நேரில் பார்க்கவில்லை என்றும், எனது தந்தை மேல் உள்ள பாசத்தின் காரணமாக பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. எனது தந்தைக்கு தலையிலிருந்து இரத்தம் வந்ததை பார்த்தேன் என்றால் சரிதான். அடி வயிறு முழுவதும் கெட்டியாக ஆகிவிட்டது. அடி வயிற்றில் கிழித்த காயம் இல்லை என்றால் சரிதான். இடுப்பிலும், முதுகிலும் கிழித்த காயமோ, சிராய்ப்பு காயமோ இல்லை என்றால் சரிதான், உள்காயம் இருந்தது.

5. சம்பவம் காலை 11.00 மணிக்கு நடத்திருக்கும் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த நேரம் குறித்து போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். எனது தந்தையை எத்தனை மணிக்கு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றேன் என்ற விவரத்தினை போலீசார் விசாரணையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டுள்ளேன், கார் வைத்து அவரை மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றேன். சேலத்திற்கு அழைத்து சென்ற மருத்துவமனையின் பெயர் தெரியுமா என்றால் தெரியாது.

6. ஆஜர் எதிரியின் வீடு சிமெண்ட் அட்டை வீடு என்றால் சரிதான். வீட்டின் வாசப்படி எந்த திசையில் உள்ளது என்றால் தெற்கு பக்கமாக உள்ளது. சம்பவத்தின் போது அக்கம் பக்கம் யாருமில்லை என்றால் சரிதான். அருகில் சுமார் 10 வீடுகளே உள்ளன. அருகிலுள்ள வீடுகளும் கூப்பிடும் துாரத்தில் உள்ளது என்றால் சரிதான். அங்கு குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். சம்பவத்தின் போது ஆஜர் எதிரி அங்கு இருந்தார் என்றால் சரிதான். ஆஜர் எதிரி வீட்டை விட்டு வெளியே ஓடவில்லை என்றால் சரிதான்.

**(குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது)**

**(விசாரணை முடிக்கப்பட்ட நேரம் 01.34.P.M)**

Taken down by me in open court in the presence of the Accused. Read over to the witness and admitted by him/her to be correct.

R ELANCHEZHIAN

Digitally signed by R ELANCHEZHIAN
Date: 2026.01.22 14:55:15 +0530

District Munsif-cum-Judicial Magistrate,
Yercaud.